**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண்.018653 /NTSE/2021 நாள் : 12.01.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE), ஜனவரி 2022 – தேர்வு தேதி மாற்றம் மற்றும் நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் – செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – சார்பு.

------

**23.01.2022** (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெற இருந்த தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE) ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு காரணமாக **29.01.2022 (சனிக்கிழமை)** நடைபெறும். மேலும், தேசிய திறனாய்வுத் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை சம்பந்தப்பட்ட பள்ளியின் முதல்வர் / தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் **19.01.2022** முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதுகுறித்தான செய்திக்குறிப்பு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இதனை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் பத்திரிகையில் செய்தியாக வெளியிடுமாறும் வானொலி / தொலைக்காட்சியில் ஒலி / ஒளி பரப்பிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**"இது விளம்பரம் அல்ல"** எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>**
**<u>தேசிய திறனாய்வுத் தேர்வு ஜனவரி 2022 (NTSE) (மாநில அளவிலானது)</u>**
**<u>செய்திக் குறிப்பு</u>**

**23.01.2022 (ஞாயிற்றுக்கிழமை)** அன்று நடைபெற இருந்த தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE), ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு காரணமாக **29.01.2022 (சனிக்கிழமை)** அன்று நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. மேலும், இத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை சம்பந்தப்பட்ட பள்ளியின் முதல்வர் / தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக **19.01.2022** முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள **User ID, Password**-ஐப் பயன்படுத்தி இத்தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளைப் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம் : சென்னை – 600 006**
**நாள்: 12 .01.2022**